**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 182/2024**
**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ராஜ்குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. சின்னமுருகன்** | **Calling** | : | **பால் வியாபாரம்** |
| **Village** | : | **வாழைக்காய்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **31** |
| | | | **Dated** | : | **24.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**5−ம் எதிரி ஆஜர். 1 முதல் 4 வரையிலான எதிரிகள் ஆஜரில்லை, பிரிவு 355 BNSS−ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 4 (பட்டியல் சாட்சி 5), **திரு. ராஜ்குமார்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை :−</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து பால் வியாபாரம் செய்து வருகிறேன். சின்ன முருகன், கார்த்திக் பாண்டி ஆகியோரை எனக்குத் தெரியும். வழக்கின் எதிரிகள் அனைவரையும் தெரியும். நிலபுரோக்கர் ராஜ்குமார் என்பவரிடம் எங்களுக்கு சொந்தமான நிலத்தை விற்பனை செய்வதற்காக கொடுத்திருந்தோம். கஸ்பார் என்பவரிடம் இடைத்தரகராக இருந்து ராஜ்குமார் ரூ. 30 லட்சம் முன்பணமாக கிரயம் கொடுப்பதற்காக பேசி வாங்கிக் கொண்டேன். மேற்படி எங்களுக்கு சொந்தமான சொத்தில் போதுமான வழிப்பாதை இல்லாததால், அவர்கள் முன்பணமாக கொடுத்த பணத்தை எங்களிடம் திரும்ப கேட்டார்கள். நாங்கள் பணத்தை

செலுத்துவதற்கு கால அவகாசம் ராஜ்குமாரிடம் கேட்டோம். 27.11.2021–ம் தேதி சனிக்கிழமை காலை 08.00 மணியளவில் நான் பால் வியாபாரத்திற்கு சென்றுவிட்டேன். அப்போது வீட்டில் என் அம்மா கலைச்செல்வி, அப்பா சின்னமுருகன், தம்பி கார்த்திக்பாண்டியன் ஆகியோர் இருந்தார்கள். ராஜ்குமார் தான் கொடுத்த பணத்தை திரும்ப செலுத்தச் சொல்லி, தனக்கு பணம் கொடுத்தவர் தொல்லை கொடுப்பதாக சொல்லியுள்ளார். அதற்கு நாங்கள் 15 நாட்கள் கால அவகாசம் கேட்டு இன்னும் நாள் உள்ளது என்று என் அம்மா சொல்லியுள்ளார். அப்போது ராஜ்குமார் 28ம் தேதி ஞாயிற்று கிழமை நீ எப்படி கறிக்கடை போடப்போகிறாய் என்று பார்க்கிறேன் என்று சொல்லி எனது தம்பி மற்றும் அப்பாவிடமும் தகராறு செய்துள்ளார். 28.11.2021ம் தேதி ஞாயிறுக்கிழமை காலை 06.00 – 08.00 மணிக்குள்ளாக வாழைக்காய்பட்டி பிரிவு அருகே என் தம்பியும், அப்பாவும் கறிக்கடையில் இருந்தபோது, ராசு, தாமோதரன், மாமுடி, லிங்கேஷ்பாரத், ராஜ்குமார் ஆகியோர் அங்கு வந்து என் தம்பி கார்த்திக்பாண்டியை இடதுகை, சுண்டு விரல் மோதிரவிரலுக்கு இடையே, இடது நெஞ்சுப்பகுதி, இடது அக்குள்பகுதி, இடதுபக்க இடுப்பு, வலது தோள்பட்டை, வலது கண்புருவம், வலதுபக்க இடுப்பு ஆகிய இடங்களில் வெட்டியுள்ளார்கள். நான் பால் வியாபாரத்தில் இருந்தபோது, எனது அப்பா எனக்கு போன் செய்து நடந்த சம்பவத்தை சொன்னபோது, நான் சம்பவ இடத்திற்கு வந்தேன். அக்கம் பக்கத்தினர் சேர்ந்து என் அப்பாவுடன் என் தம்பியை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்துள்ளனர். பிறகு நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று என் தம்பியை பார்த்தபோது, அவருக்கு இடது சுண்டுவிரல் தனியாக தொங்கி கொண்டு இருந்தது. நிறை இரத்தபோக்கு இருந்தது. அங்கு பார்க்க முடியாது என்பதால் மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு போகச் சொன்னார்கள்.

போலீசார் தகவல் தெரிந்து சம்பவ இடத்திற்கு என்னையும், என் அப்பாவையும் வரச்சொன்னார்கள். நாங்கள் அங்கு போனபோது போலீசார் விசாரித்தார்கள். இடம் சம்மந்தப்பட்ட பிரச்சனை என்று நாங்கள் சொன்னதால், எங்களை திண்டுக்கல் தாலுகா காவல்நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். நானும், எனது அப்பாவும் திண்டுக்கல் தாலுகா காவல்நிலையத்திற்கு போய் புகார் கொடுத்தோம். மாலை 03.00 அளவில் இந்த வழக்கின் எதிரிகளை கைது செய்து போலீசார் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்திருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>5–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் சம்பவதன்றே என்னை விசாரித்தார். என்னை ஆய்வாளர் விசாரிக்கும்போது முதல் விசாரணையில் சொன்ன விபரத்தைத்தான் சொன்னேன். 27–ம் தேதி நடந்த சம்பவம் எனக்கு நேரடியாகத் தெரியும். நான் பாலுக்கு போய்விட்டு வந்துவிட்டேன். மேற்கண்டவாறு 27–ம் தேதி நடந்த சம்பவத்தை நேரில் பார்த்ததாக ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லியிருக்கிறேன். 27–ம் தேதி நடந்த சம்பவத்தை நடந்த சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், என் அப்பா சொல்லித்தான் அந்த சம்பவம் எனக்குத் தெரியும் என்றாலும் சரியல்ல. புகார் மனுவை நான்தான் எழுதினேன். அதில் நான் கையொப்பம் செய்துள்ளேன். 28–ம் தேதி யார் யார் வெட்டினார்கள் என்று என் அப்பா சொன்னார் என்றால், 5 நபர்கள் வெட்டியதாகத்தான் சொன்னார். 27–ம் தேதி நடந்த சம்பவத்தின்போது பக்கத்தில் வீடுகள் எதுவும் இல்லை. எங்கள் வீட்டைச் சுற்றி நிறைய வீடுகள் உள்ளன என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 27–ம் தேதி நடந்த சம்பவத்தின்போது பொதுமக்கள்

யாரும் அங்கு கூட்டமாக கூடவில்லை. அசா. 1 சின்ன முருகன் எனது தகப்பனார். அசா. 2 கார்த்திக் பாண்டியன் எனது தம்பி. வெட்டியதாக கேள்விப்பட்டவுடன் நான் சம்பவ இடத்திற்கு சென்ற விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன். என்னிடம் முன்பணத்தை கஸ்பர் ராஜ்குமாரிடம் கொடுத்து ராஜ்குமார் பணத்தை என்னிடம் கொடுத்தார். பணம் கஸ்பருடையது. சம்பவத்திற்கு பிறகு கஸ்பார் சிவில் வழக்கு தொடர்ந்து எங்களிடம் இருந்து பணத்தை வாங்கிக்கொண்டார். 27–ம் தேதி எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக நான் மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 5–ம் எதிரி ராஜ்குமார்என்னுடைய உறவினர் என்றால் சரிதான். அவருக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே எங்களுக்குள் இருந்த முன்பகையை வைத்துக் கொண்டு 27–ம் தேதி 5–ம் எதிரி ராஜ்குமார் என் அப்பாவையும், தம்பியையும் மிரட்டியதாகவும், நான் உடன் இருந்து பார்த்ததாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

**5–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் தம்முடையதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

Taken down by me/before me in open court on 24.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.03.24 14:56:45 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 182/2024**

**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. வேல்குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பால்ராஜ்** | **Calling** | : | **பால் வியாபாரம்** |
| **Village** | : | **வாழைக்காய்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **38** |
| | | | **Dated** | : | **24.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**5–ம் எதிரி ஆஜர். 1 முதல் 4 வரையிலான எதிரிகள் ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 5 (பட்டியல் சாட்சி 6), **திரு. வேல்குமார்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து பால் வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். 28.11.2021ம் தேதி காலை 10.30 மணிபோல் வாழைக்காய்பட்டி பிரிவு அருகே கூட்டமாக இருந்தது. போலீசார் அங்கு இருந்தனர். அங்கு போலீசார் கார்த்திக் பாண்டியை வெட்டியது சம்மந்தமாக விசாரித்துக் கொண்டு இருந்தனர். அவர்கள் வரைபடம் வரைந்து கொண்டு இருந்தார்கள். நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொல்வாயா என்று கேட்டு, அவர்கள் நான் சரி என்று சொன்னவுடன் என்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். **மேற்படி பார்வை மகஜர்**

**அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நான் கையொப்பம் செய்த தாளில் என்னுடன் எனது அண்ணன் அம்மாவாசையும் சாட்சியாக கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>5–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

அசா. 1 என்னுடைய தாய்மாமா என்றால் சரிதான். அசா. 2 கார்த்திக் பாண்டியன் என் தாய் மாமா மகன். சம்பவ இடத்தில் நிறைய கடைகளுடம், பொதுமக்களும் இருப்பார்கள் என்றால் சரிதான். வாழைக்காய்பட்டி பிரிவில் எனக்கு வீடோ, கடையோ கிடையாது என்றால் சரிதான். வரைபடம் வரைந்த தாளில்தான் நான் கையொப்பம் செய்தேன். நான் ஒரு கையொப்பம்தான் செய்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. படம் வரைந்தது காவல் ஆய்வாளர். நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றாலும், ஆய்வாளர் என் முன்னிலையில் படம் எதுவும் வரையவில்லை என்றாலும், அசா. 1 எனது தாய் மாமா என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு, தற்போது சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

5–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் தம்முடையதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Taken down by me/before me in open court on 24.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.03.24 14:57:14 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,
## DINDIGUL.
## S.C. 182/2024
## Prosecution Witness : 6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ராஜசேகரன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பரசுராமன்** | **Calling** | : | **ரியல் எஸ்டேட்** |
| **Village** | : | **வாழைக்காய்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **28** |
| | | | **Dated** | : | **24.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**5–ம் எதிரி ஆஜர். 1 முதல் 4 வரையிலான எதிரிகள் ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 6 (பட்டியல் சாட்சி 8), **திரு. ராஜசேகரன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து ரியல் எஸ்டேட் செய்து வருகிறேன். அசா. 1 மற்றும் அசா. 2 ஐ தெரியும். இந்த வழக்கின் எதிரிகளைத் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் அழைத்தன்பேரில் நீதிமன்றத்திற்கு வந்தேன். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

அசா. 1 மற்றும் அசா. 2 ஆகியோருக்கு சொந்தமான வீரப்பன்கொட்டத்தில் உள்ள நிலத்தை எதிரி ராஜ்குமார் என்பவர் மூலமாக விற்பனை செய்வதற்காக ரூ. 10 லட்சம் முன்பணமாக வாங்கிக்கொண்டு,அசல் பத்திரத்தில் அசா. 1 மற்றும் அசா. 2 யிடம் இருந்து எதிரி ராஜ்குமார் வாங்கி வைத்துக் கொண்டார் என்றும், மேற்படி நிலத்திற்கு பாதை வசதி இல்லாததால், எதிரி ராஜ்குமார் அசா. 1 மற்றும் அசா. 2 யிடம் முன்பணத்தை திரும்ப கேட்டு தகராறு செய்து வந்தார் என்றும், 27.11.2021ம் தேதி மாலை 05.00 மணிக்கு நான் நத்தம் ரோடு, ITI பேருந்து நிறுத்தம் அருகே எனது சொந்த வேலையாக நின்று கொண்டு இருந்தேன் என்றும், அப்போது ராஜ்குமாரும், எனக்கு தெரிந்த ராஜ், தாமோதரன், மாமுடி, லிங்கேஷ்பாரத் ஆகியோர்கள் இருந்தார்கள் என்றும், ராஜ்குமார் மற்ற எதிரிகளிடம் அசா. 1 மற்றும் அசா. 2 முன்பணத்தை வாங்கிக் கொண்டு திரும்பித்தராமல் தன்னை அசிங்கப்படுத்திவிட்டதாகவும், அவர்களை தீர்த்துக்கட்டினால்தான் நான் நிம்மதியாக இருக்க முடியும் என்று கூறி அதற்கான செலவுகளை நானே பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லி திட்டம் தீட்டினார்கள் என்று 28.11.2021ம் தேதி காலை 06.00 மணிக்கு அசா. 1 மற்றும் அசா. 2 ஆகியோர் வாழைக்காய்பட்டி பிரிவு கறிக்கடையில் இருந்தபோது, TN 59 BB 6241 ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தில் வந்த ராஜ், தாமோதரன், மாமுடி, லிங்கேஷ்பாரத் ஆகியோர் அசா. 1 மற்றும் அசா. 2 ஐ அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அசா. 2 ஆன கார்த்திக் பாண்டியனை அருவாளாலும், கத்தியாலும் மாறி மாறி வெட்டி குத்தியதாகவும், அசா. 1 தடுக்க வந்த சின்ன முருகனை ஆயுதங்களைக்காட்டி பணத்தை கொடுக்காவிட்டால் உன்னையும் வெட்டிகொல்லாமல் விடமாட்டோம்

என்று மிரட்டிவிட்டு அங்கிருந்து தப்பி சென்று விட்டார்கள் என்றும், அன்று காலை 10.30 மணிக்கு சம்பவத்தை கேள்விப்பட்டேன் என்றும் எதிரிகள் ஒன்றுகூடி பேசி திட்டம் போட்டதுபோல், அசா. 2 கார்த்திக் பாண்டியனை கொலை செய்ய முயன்றுள்ள விபரம் அப்பத்தான் எனக்கு தெரிய வந்தது என்றும், போலீசார் விசாரணையின்போது கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து வழக்கின் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 24.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.03.24 14:57:23 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 182/2024**

**Prosecution Witness : 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சேவியர் திஷான்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. அன்பழகன்** | **Calling** | : | **கோழி வளர்ப்பு** |
| **Village** | : | **வாழைக்காய்பட்டி** | **Religion** | : | **கிறிஸ்தவர்** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **29** |
| | | | **Dated** | : | **24.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**5-ம் எதிரி ஆஜர். 1 முதல் 4 வரையிலான எதிரிகள் ஆஜரில்லை, பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 7 (பட்டியல் சாட்சி 9), **திரு. சேவியர் திஷான்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை :-</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கோழி வளர்ப்பு வேலை செய்து வருகிறேன். அசா. 1 மற்றும் அசா. 2 ஐ தெரியும். இந்த வழக்கின் எதிரிகளைத் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் அழைத்தன்பேரில் நீதிமன்றத்திற்கு வந்தேன். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

அசா. 1 மற்றும் அசா. 2 ஆகியோருக்கு சொந்தமான வீரப்பன்கொட்டத்தில் உள்ள நிலத்தை எதிரி ராஜ்குமார் என்பவர் மூலமாக விற்பனை செய்வதற்காக ரூ. 10 லட்சம் முன்பணமாக வாங்கிக்கொண்டு,அசல் பத்திரத்தில் அசா. 1 மற்றும் அசா. 2 யிடம் இருந்து எதிரி ராஜ்குமார் வாங்கி வைத்துக் கொண்டார் என்றும், மேற்படி நிலத்திற்கு பாதை வசதி இல்லாததால், எதிரி ராஜ்குமார் அசா. 1 மற்றும் அசா. 2 யிடம் முன்பணத்தை திரும்ப கேட்டு தகராறு செய்து வந்தார் என்றும், 27.11.2021ம் தேதி மாலை 05.00 மணிக்கு நான் நத்தம் ரோடு, ITI பேருந்து நிறுத்தம் அருகே எனது சொந்த வேலையாக நின்று கொண்டு இருந்தேன் என்றும், அப்போது ராஜ்குமாரும், எனக்கு தெரிந்த ராஜ், தாமோதரன், மாமுடி, லிங்கேஷ்பாரத் ஆகியோர்கள் இருந்தார்கள் என்றும், ராஜ்குமார் மற்ற எதிரிகளிடம் அசா. 1 மற்றும் அசா. 2 முன்பணத்தை வாங்கிக் கொண்டு திரும்பித்தராமல் தன்னை அசிங்கப்படுத்திவிட்டதாகவும், அவர்களை தீர்த்துக்கட்டினால்தான் நான் நிம்மதியாக இருக்க முடியும் என்று கூறி அதற்கான செலவுகளை நானே பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லி திட்டம் தீட்டினார்கள் என்று 28.11.2021ம் தேதி காலை 06.00 மணிக்கு அசா. 1 மற்றும் அசா. 2 ஆகியோர் வாழைக்காய்பட்டி பிரிவு கறிக்கடையில் இருந்தபோது, TN 59 BB 6241 ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தில் வந்த ராஜ், தாமோதரன், மாமுடி, லிங்கேஷ்பாரத் ஆகியோர் அசா. 1 மற்றும் அசா. 2 ஐ அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அசா. 2 ஆன கார்த்திக் பாண்டியனை அருவாளாலும், கத்தியாலும் மாறி மாறி வெட்டி குத்தியதாகவும், அசா. 1 தடுக்க வந்த சின்ன முருகனை ஆயுதங்களைக்காட்டி பணத்தை கொடுக்காவிட்டால் உன்னையும் வெட்டிகொல்லாமல் விடமாட்டோம்

என்று மிரட்டிவிட்டு அங்கிருந்து தப்பி சென்று விட்டார்கள் என்றும், அன்று காலை 10.30 மணிக்கு சம்பவத்தை கேள்விப்பட்டேன் என்றும் எதிரிகள் ஒன்றுகூடி பேசி திட்டம் போட்டதுபோல், அசா. 2 கார்த்திக் பாண்டியனை கொலை செய்ய முயன்றுள்ள விபரம் அப்பத்தான் எனக்கு தெரிய வந்தது என்றும், போலீசார் விசாரணையின்போது கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து வழக்கின் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 24.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.03.24 14:57:32 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.